செ.வெ.எண்: 21 நாள்: 09.09.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் மீனவர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் திரு.இ.ஏ.ரெத்தினசபாபதி அவர்கள் வழங்கினார்.**

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மீன்வளத்துறையின் சார்பில் மீனவர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் திரு.இ.ஏ.ரெத்தினசபாபதி அவர்கள் இன்று (9-9-2016) வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மீனவர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வழங்கி பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மீன்வளத்துறையின் சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் மத்திய மாநில அரசுகள் காப்புறுதித் தொகை ரூ.30 வீதம் மீனவர்களுக்காக புதுடில்லி தேசிய மீனவர் கூட்டுறவு இணையத்திற்கு இலவசமாக செலுத்தி வருகிறது. மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மீனவர் விபத்து மற்றும் முழு ஊனத்திற்கு காப்புறுதி நிவாரணத் தொகை ரூ.2.00 லட்சம் மற்றும் பகுதி ஊனத்திற்கு ரூ.1.00 லட்சம் என உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

இதன்படி கடந்த 16.05.2015 அன்று கடலில் மீன்பிடிக்கும்போது தெற்கு புதுக்குடியைச் சேர்ந்த இரு மீனவ உறுப்பினர்கள் மின்னல் தாக்கி உயிரிழந்தமைக்கு அவர்களது வாரிசுதாரர்களுக்கு விபத்து காப்புறுதி நிவாரணத் தொகை தலா ரூ.2.00 லட்சம் வீதம் மொத்தம் ரூ.4.00 லட்சத்திற்கான காசோலையும், கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் பாதுகாப்பிற்காக மத்திய மாநில அரசு திட்டத்தின் கீழ் அவசர கால எச்சரிக்கை கருவி 90 சதவீத மானியத்தில் 50 மீன்பிடி விசைப்படகு உரிமையாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. எனவே தமிழகஅரசு வழங்கும் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் மீனவர்கள் இதனை உரிய முறையில் பெற்று பயன்படுத்தி வாழ்வில் முன்னேற வேண்டும் என்றும் அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் திரு.இ.ஏ.ரெத்தினசபாபதி அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மணமேல்குடி ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் திருமதி.சத்யா கார்த்திகேயன், திருச்சி (மண்டலம்) மீன்வள துணை இயக்குநர் திருமதி.ரெ.ஷர்மிளா, புதுக்கோட்டை மீன்வள உதவி இயக்குநர் திரு.த.சேகர் வட்டாட்சியர் திரு.சுரேஷ்கண்ணன், ஒன்றியக் குழு உறுப்பினர் திரு.இன்சார், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**